## ஒவ்வொரு துறையிலும் அர்ப்பணிப்போடு மலையளவு சாதனைகள்! அடுத்து வெல்வதும் நாம்தான்!

# 2030 க்குள் நிறைவேற்றவுள்ள புதிய சிறப்புத் திட்டங்கள்!

## 'கனவுகள் மெய்ப்படும்' நிகழ்ச்சியில் 14 முக்கிய அறிவிப்புகளை வெளியிட்டு – முதல்வர் மு.க.ஸ்டாலின் பேருரை!

சென்னை, மார்ச் 8-

'ஒவ்வொரு துறையிலும் அர்ப்பணிப்போடு மலையளவு சாதனைகள்! அடுத்து வெல்வதும் நாம்தான்' என்று 2030க்குள் நிறை வேற்றவுள்ள புதிய சிறப்புத் திட்டங்களாக 14 முக்கிய அறிவிப்புகளை 'கனவுகள் மெய்ப்படும்' நிகழ்ச்சியில் உரையாற்றுகையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.3. 2026) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், "உங்கள் கனவ சொல்லுங்க" திட்டத்தின் நிறைவாக "கனவுகள் மெய்ப்படும்" என்ற தலைப்பில் நடைபெற்ற கலந்துரையாடல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு ஆற்றிய உரை வருமாறு:-

"மனதில் உறுதி வேண்டும்; வாக்கினிலே இனிமை வேண்டும்; நினைவு நல்லது வேண்டும்; நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்; கனவு மெய்ப்பட வேண்டும்; கைவசமாவது விரைவில் வேண்டும்" என்று இப்போது நமக்குத் தேவையான கவிதையை எப்பொழுதோ எழுதிவிட்டார் மகாகவி பாரதியார் அவர்கள்.

இதே கவிதையில்தான், "மண் பயனுற வேண்டும்" என்றும் பாரதியார் சொல்லியிருப்பார். மண்ணும், மக்களும், மாநிலமும் பயன்பெறத் தேவையான கனவுகளை உருவாக்க வேண்டும் என்றுதான் உங்களை நான் அழைத்திருக்கிறேன்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (6.3.2026) சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற தமிழ்நாடு 2030 "கனவுகள் மெய்ப்படும்" கலந்துரையாடல் நிகழ்ச்சியில் உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் அமைச்சர் பெருமக்கள், டி.ஆர்.பாலு உள்ளிட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், தோழமைக் கட்சிகளின் தலைவர்கள், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பத்திரிகை மற்றும் ஊடக நிறுவனங்களின் உரிமையாளர்கள் மற்றும் ஆசிரியர்கள், சமூக ஊடகவியலாளர்கள், தொழில்துறை வல்லுநர்கள், கல்வியாளர்கள், திரையுலகப் பிரபலங்கள், அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள், கலை, பண்பாடு, இலக்கியம் சார்ந்த ஆளுமைகள், திரையுலகத்தைச் சார்ந்தவர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கான முதல்வரின் முக்கிய அறிவிப்புகளில் சில...

- ❖ கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் 7 லட்சம் புதிய வீடுகள்!
- ❖ நிகர சாகுபடி பரப்பளவு 50 லட்சம் ஏக்கராக உயர்த்தப்படும்!
- ❖ 50 லட்சம் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு!
- ❖ உத்தமர் காந்தியடிகள் பெயரில் மாதிரி கிராமங்கள்!
- ❖ உணவுப் பொருள் உற்பத்தி 125 லட்சம் மெட்ரிக் டன்னாக உயர்த்தப்படும்!
- ❖ சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் கிராமங்களில் திறன்மேம்பாட்டு மையங்கள்!
- ❖ கல்வி நிறுவனங்களில் ஏஐ ஆய்வகங்கள்!
- ❖ தமிழ்நாடு முழுதும் 1000 மாதிரிப் பள்ளிகள்!
- ❖ அரசு மற்றும் உதவி பெறும் பள்ளிகளில் ஸ்மார்ட் வகுப்பறை!
- ❖ ஆதிதிராவிடர் – பழங்குடியினருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள்!
- ❖ ஒவ்வொரு மாவட்டத்திலும் மனநல ஆலோசனை மையங்கள்!
- ❖ மாவட்டந்தோறும் நவீன தொழில் பூங்காக்கள்!
- ❖ அடுத்த ஐந்தாண்டில் 1 லட்சம் கோடி டாலர் பொருளாதார மாநிலமாக உருவாக்குவோம்!
- ❖ நகர்ப்புறங்களுக்கு இணையாக கிராமப்புற வளர்ச்சி!
- ❖ அம்பேத்கர் அயலக உயர்கல்வித் திட்டம் விரிவுபடுத்தப்படும்!

### அரசியல் வரலாற்றில் மார்ச் 6 முக்கியமான நாள்!

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில், மிகமிக முக்கியமான நாளாக இந்த மார்ச் 6 அமையப் போகிறது. இப்படியொரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கும் அமைச்சர் பெருமக்களே, தோழமைக் கட்சித் தலைவர்களே, சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர் களே, மதிப்பிற்குரிய தலைமைச் செயலாளர் உள்ளிட்ட அனைத்துத் துறையின் அதிகாரிகளே, அலுவலர்களே, பல்வேறு ஊடகங்களைச் சார்ந்த நண்பர்களே, தொழில் துறையின் அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதி களே, கல்வியாளர்களே, அறிவியல் தொழில்நுட்ப வல்லுநர்களே, தமிழ்நாட்டின் கலை, பண்பாட்டு, இலக்கிய ஆளுமைகளே, காலநிலை செயற்பாட்டாளர்களே, என் பேரன்பிற்குரிய மாணவ, மாணவியர்களே, இந்த அரங்கத்தில் இருப்பவர்கள் மட்டுமல்ல, அனைத்து மாவட்டங்களில் இருந்தும், வீடியோ கான்ஃபரன்ஸ் மூலமாக, இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டிருக்கக்கூடிய நண்பர்களே, மக்கள் பிரதிநிதிகளுக்கும், மாவட்ட ஆட்சியர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்!

இந்த நிகழ்ச்சியை "Live"இல் பார்த்துக் கொண்டிருக்கும் இலட்சக் கணக்கான என் அன்புக்குரிய தமிழ்நாட்டு மக்களுக்கும் வணக்கம்!

உங்கள் ஒவ்வொருவரையும் தனி மனிதர்களாக நான் பார்க்கவில்லை. உங்கள் எல்லோரையும் தமிழ்நாட்டின் பிரதிநிதிகளாக பார்க்கிறேன்! அந்த பெரும் நம்பிக்கையுடன் தான் உங்களுக்கு அழைப்பு விடுத்து வரவைத்திருக்கிறோம். எங்களின் அழைப்பை ஏற்று வந்திருக்கும் அனைவருக்கும் முதலில் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

### எதிர்கால தமிழ்நாட்டை மனதில் வைத்து நடத்தப்படும் கனவுகள் மெய்ப்படும் நிகழ்ச்சி!

தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இன்றைய நிகழ்ச்சி போல என்றைக்கும் நடந்திருக்காது. கடந்த காலத்தையும், நிகழ்காலத்தையும் மட்டுமல்ல, எதிர்கால தமிழ்நாட்டையும் மனதில் வைத்து, இந்த "தமிழ்நாடு 2030 - கனவுகள் மெய்ப்படும்" நிகழ்ச்சியை உருவாக்கியிருக்கிறோம்!

கடந்த ஐந்தாண்டுகளில், நம்முடைய திராவிட மாடல் அரசு, ஒவ்வொரு துறையிலும் அர்ப்பணிப்பு உணர்வுடன் ஆற்றிய மகத்தான பணிகளை, அளப்பரிய சாதனைகளை சுருக்கமாக, ஆனால், மிகத் தெளிவாக, இந்த நிகழ்ச்சியின் தொடக்கத்திலிருந்து நம்முடைய அமைச்சர் பெருமக்கள் சிலர் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் என்னுடைய வாழ்த்துகளையும், பாராட்டுக்களையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

நேரத்தின் நெருக்கடி காரணமாக, அவர்கள் சுருக்கமாக பேசினார்கள். இன்னும் சில அமைச்சர்களும் பேசுவதற்கு நேரம் இடம் கொடுக்கவில்லை. நாம் அவ்வளவு காரியங்களை நிறைய செய்திருக்கிறோம்! எல்லாவற்றையும் இந்த நிகழ்ச்சியில் சொல்ல முடியாத அளவுக்கு மலையளவு சாதனைகளை வைத்திருக்கிறோம்!

### அமைச்சர்களின் அயராது உழைப்புதான்! வளர்ச்சியை நோக்கி தமிழ்நாடு!

ஒவ்வொரு துறையிலும் அமைச்சர் பெருமக்கள் துறையின் அதிகாரிகள், கடைநிலை அரசு ஊழியர்கள் வரை அரசுத் திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி, அதன் பயன்களை மக்களுக்கு கொண்டு சேர்ப்பதில் காட்டி வரும் அர்ப்பணிப்பு உணர்வும் அயராத உழைப்பும் நிர்வாகத் திறனும் தமிழ்நாட்டை அடுத்தகட்ட வளர்ச்சி நோக்கி உயர்த்தியிருக்கிறது!

கடந்த 5 ஆண்டுகளில் மக்கள் அடைந்திருக்கும் மகிழ்ச்சிதான், நான் மகிழ்ச்சியாக இருப்பதற்குக் காரணம்! சொன்னதை மட்டுமல்ல. சொல்லாத பல முத்திரை திட்டங்களையும் செயல்படுத்தி இருக்கிறோம்! ஆட்சிக்கு வரும்போது, இவ்வளவு திட்டங்களை நம்மால் நிறைவேற்ற முடியுமா? என்ற ஏக்கம் எனக்கு இருந்தது. ஆனாலும், அத்தனைத் திட்டங்களை யும் நிறைவேற்றிக் காட்ட வேண்டும் என்ற கனவும் எனக்கு இருந்தது.

கடந்த 5 ஆண்டுகளுக்கான என்னுடைய கனவுகளில் பெரும்பாலும் நிறைவேறிவிட்டது என்று இந்த நிகழ்ச்சி மூலமாக அறிவிப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

### நமது திட்டங்களில் பயனடையாத குடும்பங்களே தமிழ்நாட்டில் இல்லை!

நாங்கள் ஆட்சியில் செய்த திட்டங்களில் எந்த திட்டம் சிறப்பானது என்று என்னைக் கேட்டால், அனைத்துத் திட்டங்களும் சிறப்பானதுதான் என்று சொல்வேன். ஏனென்றால், ஒவ்வொரு திட்டத்தையும் தேவைக்கேற்ப மக்களுக்காக யோசித்து, திட்டம் தீட்டி, அவர்களிடம் கொண்டு சென்று சேர்ப்பதற்கு எவ்வளவு முயற்சி எடுத்திருக்கிறோம், அதில் எவ்வளவு வெற்றி பெற்றிருக்கிறோம் - அதனால்தான், நான் அடிக்கடி சொல்வேன். நம்முடைய திட்டங் களால் பயனடையாத குடும்பங்களே தமிழ்நாட்டில் இல்லை என்று சொல்லும் அளவுக்கு ஒவ்வொரு தரப்புக்கும் பார்த்துப் பார்த்து செய்திருக்கிறோம்.

நம்முடைய திட்டங்களால் பயனடைந்தவர்களின் பட்டியல் பெரிய புத்தகமே (Book) என்னிடம் இருக்கிறது. அதையெல்லாம் சொன்னால், இந்த ஒரு நாள் போதாது. இந்தத் திட்டங்கள் எல்லாம் போதுமா என்று என்னிடம் கேட்டால், போதாது! இன்னும் நிறைய சாதனைகளை செய்திருக்க வேண்டும். செய்திருக்கலாம்! அரசியல் ரீதியாக சில நெருக்கடிகள்! நிதி நெருக்கடிகள்! இப்படி நிறைய முட்டுக்கட்டைகள்! அதற்காக, இந்தக் காரணங்களைச் சொல்லி, தப்பித்துக்கொள்ளலாம் என்று நினைப்பவன் இல்லை இந்த ஸ்டாலின்! காரணம் சொல்பவன் காரியம் செய்ய மாட்டான் என்று ஊர் பக்கம் சொல்வார்கள். சூழ்நிலைகள் எதிராக இருந்தாலும், அதை தன்வசப்படுத்தி வெல்வதுதான் என்னுடைய Style!

### தமிழ்நாட்டு மக்களுக்காக தொடர்ந்து உழைத்துக்கொண்டே இருப்பேன்!

"பெரிதினும் பெரிது கேள்" என்ற அடிப்படையில்,

Negativeகளையும், Positiveஆக மாற்றி, இந்தச் சாதனைகளை செய்திருக்கிறோம்! இதுதான் திராவிட மாடலின் Style! அதற்காக, இதுவே போதும் என்று திருப்தி யடைய மாட்டோம்! "உழைக்கும் வரை உதிக்கும் ஞாயிறு" என்று முத்தமிழறிஞர் கலைஞர் சொல்வார். நான் தினந்தோறும் உழைக்கிறேன், உழைத்துக்கொண்டே இருக்கிறேன். தமிழ்நாட்டு மக்களுக்காக தொடர்ந்து உழைப்பேன். இது மட்டும்தான் என்னுடைய Secret of Success!

என்னுடைய அரசு செய்திருக்கும் சாதனைகளை நம்பி நான் உறுதியாக சொல்கிறேன். அடுத்து, அமையப் போவதும் திராவிட மாடல் ஆட்சிதான். எங்களுடைய சாதனைகளின் அடுத்தகட்டமாக, திராவிட மாடல் 2.0 ஆட்சி இருக்கும்! அதற்கான Trailer தான் இந்த நிகழ்ச்சி!

### கோடியே 80 லட்சம் குடும்பங்களின் தேவைகளைக் கேட்டறிந்தோம்!

அடுத்த 5 ஆண்டுகளில், தமிழ்நாட்டின் வளர்ச்சி எப்படி இருக்க வேண்டும்; நாம் எந்த பாதையில் Travel செய்ய வேண்டும் என்று ஒரு Blue Print தயாரிக்க திட்டமிட்டோம். அப்போது எனக்கு பேரறிஞர் அண்ணா சொன்னதுதான் நினைவுக்கு வந்தது. "மக்களிடம் செல், மக்களுடன் வாழ், மக்களிடம் இருந்து கற்றுக்கொள்" எனும் அறிவுரையின் அடிப்படையில், தமிழ்நாட்டின் 1 கோடியே 80 இலட்சம் குடும்பங்களிடம் நேரடியாக சென்று, அவர்களின் கனவுகளை, அவர்கள் தேவைகளை, அவர்கள் எதிர்பார்ப்புகளை கேட்டறிந்தோம். இதை எப்படி

தொடர்ச்சி 10 ஆம் பக்கம்



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், தமிழ்நாடு மீனவர் சங்கத்தின் தலைவர் – துரை மகேந்திரன் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, – கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அவர்களை மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக அறிவித்து வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதையொட்டி நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ.ராசா, என்.ஆர். இளங்கோ, கழக செய்தி தொடர்பு தலைவர் – டி.கே.எஸ். இளங்கோவன், கழக அமைப்புச் செயலாளர் – ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்புக் குழு செயலாளர் – கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (6.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயத்தில், இந்திய மீனவர் நல முன்னணி சங்கத்தின் தலைவர் மா.கி. சங்கர் மற்றும் நிர்வாகிகள் சந்தித்து, கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் அவர்களை மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் வேட்பாளராக அறிவித்து வேட்புமனு தாக்கல் செய்யப்பட்டதையொட்டி நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கனிமொழி கருணாநிதி, ஆ. ராசா, என்.ஆர். இளங்கோ, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக செய்தி தொடர்புக் குழு செயலாளர் கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளனர்.